# நாங்கள் இயேசுவுக்குக் கீழ்ப்படிகிறோம்

**இயேசுவைக் கீழ்ப்படிதலோடு பின்பற்றுபவர்களாய் இருக்கும்படி பிள்ளைகளுக்கு போதிக்கவும்**

**ஜெபம் :** "பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே. இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து அவரில் அன்பாய் இருக்கும்படியாக குழந்தைகளுக்கு உதவுமாறு இப்பாடத்தை பயன்படுத்துவீராக. இயேசுவின் பரிசுத்த நாமத்தில், ஆமென்."


குழந்தைகளின் வயதுக்கும் தேவைக்கும் ஏற்ற கல்வி செயல்பாட்டைத் தேர்க.

வீடுகட்டிய புத்தியுள்ள புத்தியில்லாத மனிதர்களைப் பற்றிய கதையை **மத்தேயு 7:24-29 லிருந்து ஒரு பெரிய பிள்ளையோ அல்லது ஆசிரியரோ** வாசிக்கவும்.

இயேசுவின் போதனைகளைக் கேட்டு வெவ்வேறு விதமாக செயல்பட்ட இரண்டு மனிதர்களுக்கு நேர்ந்தது என்ன என்பதனை கவனித்துக் கேட்குமாறு பிள்ளைகளிடம் வேண்டிக் கொள்ளுங்கள்.

**இந்தக் கேள்விகளைக் கேட்கவும்.** பதில் ஒவ்வொரு கேள்விக்கும் பின்னால் வருகிறது.

1. வீடுகட்டிய புத்தியுள்ள மனிதனைப் போன்ற மக்கள் யார்? *(வச. 24)*
2. இயேசுவின் வார்த்தைக்கு நாம் எவ்வாறு கீழ்ப்படிய வேண்டும்? *(வச. 24. நாம் என்ன செய்ய வேண்டும் என்று இயேசு கூறினாரோ அதை கைக்கொண்டு நடக்க வேண்டும்)*
3. வீட்டைக் கட்டிய புத்தியில்லாத மனிதனைப் போன்ற மக்கள் யார்? *(வச. 26)*
4. புத்தியில்லாத மனிதனின் வீட்டை கீழே விழச் செய்தது எது? *(வச. 27)*
5. இயேசு போதித்த விதத்தினால் கூட்டம் ஏன் ஆச்சரியம் அடைந்தது? *(வச. 28 இயேசு அதிகாரத்துடன் போதித்தார்)*



மணல் மேல் வீடு கட்டிய மனிதன்

வீடுகட்டிய இரு மனிதர்களின் கதையை **நாடகம் ஆக்குக** (மத். 7:24-29). குழந்தைகள் ஆராதனை வேளையில் இந்த நாடகத்தை அரங்கேற்றுமாறு ஆராதனைத் தலைவரோடு கலந்து பேசி ஏற்பாடு செய்க. உங்கள் நேரத்தைக் குழந்தைகளோடு செலவிட்டு நாடகத்தைப் பயிற்சி செய்வதில் உதவவும்.

**பெரிய குழந்தைகளோ பெரியவர்களோ** இந்தப் பாத்திரங்களை ஏற்கலாம்.

- **கதை கூறுபவர்:** கதைச் சுருக்கம் கூறுதலும் குழந்தைகள் பேச வேண்டிய வரிகளை நினைப்பூட்டுதலும்
- **இயேசு**

**இளங்குழந்தைகள்** இந்த வேடங்களைத் தாங்கட்டும்

- **புத்தியுள்ள மனிதன்** (கல் அல்லது செங்கல் வைத்துக் கொள்ளவும்)
- **புத்தியில்லாத மனிதன்** (கல் அல்லது செங்கல் வைத்துக் கொள்க)
- **புயல்** (கூட்டமாக பல பிள்ளைகள்)

**கதை கூறுபவர்:** வசனம் 24-25 லிருந்து கதையின் முதற்பகுதியைக் கூறவும். பின் சொல்ல வேண்டியது: "இயேசு கூறுவதைக் கேளுங்கள்."

**இயேசு** : "நான் சொல்லுவதைக் கைக்கொண்டு அதன்படி நடந்தால் இந்த வீடுகட்டும் புத்தியுள்ள மனிதனைப் போல் இருப்பீர்கள்."

**புத்தியுள்ளவன்:** செங்கல்லை அடுக்கி, "நான் இந்த கன்மலையின் மீது வீடுகட்டுவேன். நான் இயேசுவுக்குக் கீழ்ப்படிகிறேன்!"

புயல : செங்கல் மேல் வீசுதல் (அவைகளை கீழே தள்ள வேண்டாம்).

**கதை கூறுபவர்:** வசனங்கள் 25-29 லிருந்து கதையின் இரண்டாம் பகுதியைக் கூறி, பின், "இயேசு கூறுவதைக் கேளுங்கள்."

**இயேசு** : "நான் கூறுவதை கேட்க மட்டும் செய்து அதன்படி நடக்காவிட்டால் இந்த புத்தியில்லாத மனிதனைப் போல இருப்பீர்கள்."

**புத்தியில்லாத மனிதன்:** அறையின் இன்னொரு மூலைக்குப் போதல். செங்கற்களை அடுக்கி, "நான் இயேசு கூறுவதை கேட்க மட்டுமே செய்வேன். நான் மணல்மேல் என் வீட்டைக் கட்டுகிறேன். அது கட்டுவதற்கு எளிதாக இருக்கிறது."


புயல் : செங்கற்களை கீழே தள்ளி: "எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது? தனக்கு மக்கள் கீழ்ப்படிய வேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார். பிற போதகர்கள் தங்களுக்கு மக்கள் செவிகொடுத்தால் போதும் என்று எதிர்நோக்குகிறார்கள்."

**கதை கூறுபவர்:** நாடகத்தை அரங்கேற்ற உதவிய அனைவருக்கும் நன்றி கூறுக.

சிறுவர்கள் பெரியவர்களுக்காக இந்த நாடகத்தை நடித்துக் காட்டினால், மேலே பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளையும் கேட்கவும்.

**குழந்தைகளிடம் கேட்க வேண்டியவை:** நாம் கீழ்ப்படிய வேண்டும் என்று இயேசு கட்டளை இட்டுள்ள சில விஷயங்கள் என்ன? (குழந்தைகள் உதாரணங்களைத் தரட்டும்).

'நீங்கள் என்னிடத்தில் அன்பாய் இருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்' (யோவான் 14:15) என்ற வாசகத்தைப் பற்றி பிள்ளைகள் கவிதை, கதை அல்லது பாடலை எழுதலாம். அல்லது படங்களை வரையலாம்.



கல்லின் மேல் கட்டப்பட்ட வீடு

கன்மலையின் மேல் கட்டப்பட்ட ஒரு வீட்டின் படத்தை வரைக. பிள்ளைகள் அதைப் பார்த்து வரையட்டும்.

- சிறுவர்களுக்கு **பெரிய பிள்ளைகள்** உதவலாம்.
- தாங்கள் வரைந்த படங்களை அடுத்த ஆராதனை வேளையின் போது பெரியவர்களுக்குக் காட்டி இயேசுவின் வார்த்தைகளைக் கைக் கொள்ளுவதை இது விவரிப்பதாக விளக்கவும். விசுவாசிகள் கேட்டால் மட்டும் போதாது; அவர் கூறியபடி செய்ய வேண்டும்.

**மனன வசனம்** லூக் 11:28.

**சங்கீதம்:** நான்கு சிறுவர்கள் ஆளுக்கு ஒன்றாக சங்.18:2,7,15,16, ஐ ஒப்புவிக்கவும் (பெரியவர்களுக்காகவும்).

**ஜெபம்:** "கர்த்தாவே! நாங்கள் உமது வார்த்தையைக் கேட்க விருப்பமாய் இருக்கிறோம். அவற்றை கைக் கொண்டு நடக்கவும் விழைகிறோம். நாங்கள் அந்தப் புத்தியுள்ள மனிதனைப் போல கன்மலையாகிய உம் மீது எங்கள் வாழ்க்கையைக் கட்ட விரும்புகிறாம். நீர் பிரச்சனைகளும் புயலும் மேற்கொள்ளாத நித்திய வாழ்வை எங்களுக்குக் கொடுத்ததற்காக நன்றி இயேசப்பா."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net